# பரீட்சகரின் அறிக்கை

## மட்டம் I பரீட்சை – 2026 சனவரி

## (101) நிதிக் கணக்கீடு

---

## பகுதி A

**வினா இல. 01** (40 புள்ளிகள்)

**(ஒரு கட்டாய வினா)**

இல. **1.1** தொடக்கம் **1.10** வரை தரப்பட்ட வினாக்களில் கொடுக்கப்பட்ட விடைகளிலிருந்து மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்யும்படி கேட்கப்பட்டதுடன், இல. **1.11** தொடக்கம் **1.15** வரையில் தரப்பட்ட கூற்றுக்கள் **"சரியானதா"** அல்லது **"தவறானதா"** எனக் குறிப்பிடும்படி கேட்கப்பட்டது. மேலும், இல. **1.16** தொடக்கம் **1.20** வினாக்களுக்கு சரியான விடை அளிக்குமாறு கேட்கப்பட்டது.

இவ்வினாவில் காணப்பட்ட ஒவ்வொரு உப பிரிவுகளுக்கும் பரீட்சார்த்திகளால் அளிக்கப்பட்ட விடைகளில் இருந்த பொதுவான வழுக்கள் / பலவீனங்கள் சில கீழே தரப்பட்டுள்ளன :

**1.1** இவ்வினாவில் ''கணக்கீட்டு வெளியீடாக அமைவது எது'' எனக் கேட்கப்பட்டது. குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் சரியான விடையான (4) ''வருமானக் கூற்று'' என்பதைத் தெரிவு செய்திருந்தனர். எவ்வாறாயினும், சில பரீட்சார்த்திகள் விடையாக (1) ''பரீட்சை மீதி'' என்ற தவறான விடையைக் குறிப்பிட்டிருந்தனர்.

**1.2** இங்கு தரப்பட்டவற்றுள் ''முதன்மைப் பதிவேடு அல்லாதது எது'' எனக் கேட்கப்பட்டது. குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் (1) ''பேரேடு'' என்ற சரியான விடையை அளித்திருந்தனர். அதே வேளை சில பரீட்சார்த்திகள் (3) பொதுப் பேரேடு என்ற தவறான விடையை அளித்திருந்தனர்.

**1.3** இங்கு, பின்வருவனவற்றில் கணக்கீட்டுத் தொழினுட்பவியலாளர் ஒருவரால் பின்பற்றப்படும் ஒழுக்கநெறிக் கோவையின் ஒரு கோட்பாடாக அமைவது எது'' எனக் கேட்கப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகள் (4) ''மேற்கூறிய அனைத்தும்'' என்ற சரியான விடையை வழங்கியிருந்தனர்.

**1.4** இங்கு, ''தரப்பட்ட தகவல்களின் அடிப்படையில் **பெரேரா டிரேடர்ஸின்** 2025 மார்ச் 31 இலான பரிப்புகளின் தொகை யாதெனக் கேட்கப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகள் சரியாகக் கணிப்பிட்டு, சரியான விடையான (2) ரூ. 1,450,000/- இனைச் சமர்ப்பித்திருந்தனர். அதே வேளை சில பரீட்சார்த்திகள் தவறாகக் கணிப்பீடுகளை மேற்கொண்டு, அவர்களுடைய தவறான கணிப்பீடுகளின் அடிப்படையில் தவறான விடையான (1) "ரூ. 3,050,000/- இனைச் சமர்ப்பித்திருந்தனர்.

**1.5** இங்கு, ‘‘தரப்பட்ட தகவல்களின் அடிப்படையில், தரப்பட்டுள்ள கணக்கீட்டுச் சமன்பாட்டிற்கான மிகப் பொருத்தமான பரிவர்த்தனையைத்’’ தெரிவு செய்யுமாறு கேட்கப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகள் (3) ரூ. 65,000/- கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட பொருள்கள் ரூ. 90,000/- கடனுக்கு விற்பனை செய்யப்பட்டன என்ற சரியான விடையைத் தெரிவு செய்திருந்தனர். அதே வேளை சில பரீட்சார்த்திகள் ரூ. 65,000/- கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட பொருள்கள் ரூ. 90,000/- காசுக்கு விற்பனை செய்யப்பட்டன என்ற தவறான விடையைத் தெரிவு செய்திருந்தனர்.

**1.6** இங்கு, தமது முதலீட்டின் பாதுகாப்பை உறுதி செய்கின்ற அதே வேளை, கம்பனியின் இலாபத்தன்மை மற்றும் ஸ்திரத்தன்மையில் முதன்மையாக அக்கறை கொண்ட நாட்டதாரர்கள் யார் எனக் கேட்கப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகள் (1) பங்குதார்கள் என சரியான விடையளித்து புள்ளிகளைப் பெற்றுக் கொண்டனர்.

**1.7** இங்கு, தரப்பட்ட பரிவர்த்தனைகளை வணிகப் பேரேட்டுக் கணக்குகளில் சரியாகப் பதிவுசெய்யும் வழிமுறை யாதெனக் கேட்கப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகள் விடை இல. (2) இல் தரப்பட்ட சரியான விடையை வழங்கியிருந்தனர்.

**1.8** இங்கு, காசுப் பெறுவனவைப் பொருட்படுத்தாது குறிப்பிட்ட கணக்கீட்டுக் காலப்பகுதியில் வருவாய் (வருமானம்) ஏற்பிசைவு செய்யப்படுகின்ற செய்கையுடன் தொடர்புடைய கணக்கீட்டு எண்ணக்கரு எதுவெனக் கேட்கப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகள் (3) அட்டுறு எண்ணக்கரு என்ற சரியான விடையைத் தெரிவு செய்திருந்தனர். அதே வேளை சில பரீட்சார்த்திகள் (1) அல்லது (4) போன்ற தவறான விடைகளை அளித்திருந்தனர்.

**1.9** இந்த வினாவில், ‘‘தரப்பட்ட தகவல்களின் அடிப்படையில் 2025 டிசெம்பர் 31 இலான வங்கிக் கூற்றில் காட்டப்படும் மீதி’’ பற்றிக் கேட்கப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகள் சரியாகக் கணிப்பிட்டு, சரியான விடையான (1) ரூ. 454,000/- என்பதைத் தெரிவு செய்திருந்தனர். அதே வேளை சில பரீட்சார்த்திகள் தவறாகக் கணிப்பிட்டு, அவர்களின் தவறான கணிப்பீட்டின் அடிப்படையில் தவறான விடையான (2) ரூ. 494,000/- என்பதைத் தெரிவு செய்திருந்தனர்.

**1.10** இந்த வினா கணக்கீட்டு எண்ணக்கருக்கள் பற்றிய பரீட்சார்த்திகளின் அறிவைப் பரீட்சித்திருந்தது. இங்கு, வணிகத்தின் உரிமையாளரது மின்சாரக் கட்டணப் பட்டியலுக்கு வணிகத்தால் கொடுப்பனவு செய்யப்பட்டதுடன் இது வணிகத்தின் எடுப்பனவுகளாகக் கவனத்திற் கொள்ளப்பட்டது எனத் தரப்பட்டு அந்தச் செய்கை தொடர்பான கணக்கீட்டு எண்ணக்கரு யாதென வினவப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகள் (3) உரிம எண்ணக்கரு என்ற சரியான விடையை அளித்திருந்தனர். அதே வேளை வேறு சிலர் (2), (4) போன்ற தவறான விடைகளை அளித்திருந்தனர்.

இல. **1.11** தொடக்கம் **1.15** வரை தரப்பட்ட கூற்றுக்கள் **‘‘சரியானதா’’** அல்லது **‘‘தவறானதா’’** எனக் குறிப்பிடுமாறு கேட்கப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகள் வினா இல. 1.11, 1.13, 1.14 இல் தரப்பட்ட கூற்றுக்களை சரியாக விளங்கிக் கொண்டு, சரியாக விடை அளித்திருந்தனர்.

அதிகளவான பரீட்சார்த்திகள் வினா இல. **1.12, 1.15** ஆகியவற்றில் தரப்பட்ட கூற்றுக்கள் பற்றி சரியாக புரிந்து கொள்ளவில்லை. இதனால் அவர்கள் தவறான விடையை அளித்திரந்தனர்.

**1.16** இங்கு ''சொத்து'' என்னும் பதத்தை வரையறுக்குமாறு கேட்கப்பட்டது. குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு பூரணமான மற்றும் சரியான விடையை வழங்கத் தவறியிருந்தனர். பலர் பூரணமற்ற விடைகளை வழங்கியிருந்ததுடன், வரையறை செய்வதில் கவனம் செலுத்தியிருக்கவில்லை. வேறு சில பரீட்சார்த்திகள் சொத்து என்பது மூலதனம் மற்றும் பரிப்புக்களின் கூட்டுத்தொகை என விடையளித்திருந்தனர்.

**1.17** இங்கு, பொது நாட்குறிப்பேட்டில் பதிவு செய்யப்படும் இரண்டு (02) வகையான ஊடுசெயல்களைக் குறிப்பிடுமாறு கேட்கப்பட்டது. இங்கு, விடையில் ஊடுசெயல்களின் வகைகள் குறிப்பிடப்பட வேண்டும் என்ற போதிலும், பரீட்சார்த்திகள் பொது நாட்குறிப்பேட்டில் பதிவு செய்யப்படுகின்ற ஊடுசெயல்களுக்கான உதாரணங்களை வழங்கியிருந்தனர்.

**1.18** ''தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு'' என்பதைச் சுருக்கமாக விபரிக்குமாறு இங்கு கேட்கப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு பூரணமான, சரியான விடையை அளிக்கத் தவறியிருந்தனர். பலர் தங்களது விடைகளில், ஒரு ஆண்டிற்கும் மேலாக இருக்கின்ற வணிகம் எனக் குறிப்பிட்டிருந்ததுடன் வேறு சிலர் வணிகத்தின் உரிமையாளர் இல்லாதபோதும் வணிகம் தொடர்ந்தும் செயற்படுதலே தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு எனக் குறிப்பிட்டிருந்தனர்.

**1.19** இங்கு வருமானக் கூற்றின் இரண்டு (02) மூலகங்களைக் குறிப்பிடுமாறு கேட்கப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகள் வருமானம் மற்றும் செலவினம் என்ற சரியான விடையை வழங்கியிருந்தனர்.

**1.20** இங்கு (a), (b) இல் தரப்பட்ட ஊடுசெயல்கள் ஒவ்வொன்றையும் பதிவு செய்வதற்குப் பயன்படுத்தப்படும் தொடர்புடைய மூல ஆவணத்தை அடையாளங் காணுமாறு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன. அதிகளவான பரீட்சார்த்திகள் நாட்குறிப்பேட்டு உறுதிச்சீட்டு மற்றும் பற்றுச்சீட்டு என சரியாக விடை அளித்திருந்தனர். அதே வேளை சிறிய எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் தவறாக விடை அளித்திருந்தனர். உதாரணமாக, (a) இற்கு, பொது நாட்குறிப்பேடு, விலைப்பட்டியல், வரவுக் குறிப்பு மற்றும் (b) இற்கு விலைப்பட்டியல், செலவுக் குறிப்பு என்பன.

## <u>பகுதி B</u>

இந்தப் பகுதி 4 கட்டாய வினாக்களைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு வினாவும் 10 புள்ளிகளைக் கொண்டுள்ளது.

## வினா இல. 02

இவ்வினா 2025 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான உற்பத்திக் கிரயக் கூற்றை (உற்பத்திக் கணக்கை)த் தயாரிப்பது தொடர்பான பரீட்சார்த்திகளின் அறிவையும் புரிதலையும் பரீட்சித்திருந்தது.

அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு சரியான விடைகளை அளித்திருந்தனர். பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன:

(1) சில பரீட்சார்த்திகள் உற்பத்திக் கணக்கு பற்றிய விழிப்புணர்வைக் கொண்டிருக்கவில்லை. அவர்கள் இவ்வினாவுக்கு வெவ்வேறு வடிவமைப்புகளையும் வெவ்வேறு கணிப்பீடுகளையும் பயன்படுத்தியிருந்தனர்.

(2) ஆண்டின் ஆரம்பத்திலும் இறுதியிலும் புத்துருவாகும் வேலையானது ‘‘முதன்மைக் கிரயத்தில் மதிப்பிடப்பட்டுள்ளது’’ எனத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், சில பரீட்சார்த்திகள் அதனை முதன்மைக் கிரயத்திற்குச் சீராக்கம் செய்யாது உற்பத்திக் கிரயத்திற்குச் சீராக்கம் செய்திருந்தனர்.

(3) நேர் கூலிகள் முதன்மைக் கிரயங்களுக்கு சீராக்கம் செய்யப்பட வேண்டும் என்ற போதிலும், சில பரீட்சார்த்திகள் அதனை ஒரு பொதுச் செலவினமாகக் கருதியிருந்தனர்.

(4) மூலப் பொருள்களின் இறுதி இருப்பை மூலப் பொருள்களின் ஆரம்ப இருப்புடன் கலந்து, சமர்ப்பித்திருந்தனர்.

(5) இறுதிப் புத்துருவாகும் வேலைகள் ஆரம்பப் புத்துருவாகும் வேலைகளுடன் கலந்து, சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

(6) சில பரீட்சார்த்திகள் உற்பத்திக் கிரயத்தின் 20% இலாப எல்லையைச் சரியாகக் கணிப்பிட்டிருக்கவில்லை.

(7) நுகரப்பட்ட மூலப் பொருள்களின் கிரயமானது கணிப்பிடப்பட்ட முதன்மைக் கிரயம் மற்றும் மொத்த உற்பத்திக் கிரயங்களில் குறிப்பிடப்படவில்லை.

(8) மின்சாரம், நீர் மற்றும் வாடகையை தொழிற்சாலை மற்றும் அலுவலகத்திற்கு இடையே பகிர்வதற்கு தரப்பட்ட சதவீதங்களைப் பயன்படுத்தியிருக்கவில்லை. உற்பத்தி மேந்தலைகள் தொழிற்சாலைக்கும் அலுவலகத்திற்கும் இடையே பகிரப்படவில்லை.

## வினா இல. 03

இவ்வினா பேரேட்டுக் கணக்குகளைத் தயாரித்ததன் பின்னர் பரீட்சை மீதியைத் தயாரிப்பது பற்றிய பரீட்சார்த்திகளின் அறிவைப் பரீட்சித்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் சரியான விடைகளைச் சமர்ப்பித்திருந்தனர். பின்வரும் பலவீனங்கள் பொதுவாக அவதானிக்கப்பட்டன.

(1) பரீட்சை மீதியைத் தயாரிப்பதற்குப் பதிலாக, சில பரீட்சார்த்திகள் பேரேட்டுக் கணக்குகளை மாத்திரம் தயாரித்திருந்தனர்.

(2) சில பரீட்சார்த்திகள் இரட்டைப் பதிவுக் கோட்பாடு பற்றிய போதுமான அறிவைக் கொண்டிருக்கவில்லை என்பதை அவதானிக்க முடிந்தது.

(3) பரீட்சை மீதியில், வரவு மீதிகளாக காட்டப்பட வேண்டிய குறிப்பிட்ட சில சொத்து மற்றும் செலவின மீதிகள், செலவு மீதிகளாகக் காட்டப்பட்டிருந்ததுடன் செலவு மீதிகளாகக் காட்டப்பட வேண்டிய குறிப்பிட்ட சில பரிப்புக்கள் மற்றும் செலவின மீதிகள் வரவு மீதிகளாகக் காட்டப்பட்டிருந்தன.

(4) கடனடிப்படையிலான விற்பனைகள் மற்றும் கடனடிப்படையிலான கொள்வனவுகள் என்பன வியாபாரக் கடன்பட்டோர் மற்றும் வியாபாரக் கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்குகள் ஊடாகச் சரியாகக் கணிப்பிடப்படவில்லை.

(5) காசு விற்பனைகள், கடன் விற்பனைகள், காசுக் கொள்வனவுகள் மற்றும் கடன் கொள்வனவுகள் என்பன பரீட்சை மீதியில் தனித்தனி உருப்படிகளாகப் பதிவு செய்யப் பட்டிருந்தன.

(6) 2025 ஏப்ரல் 01 இல் கொள்வனவு செய்யப்பட்ட கோப்பி இயந்திரத்தின் 09 மாதங்களுக்கான தேய்மானம் சரியாகக் கணிப்பிடப்படவில்லை.

(7) சில்லறைக் காசேட்டிற்கு மாற்றப்பட்ட தொகையிலிருந்து செலுத்திய சில்லறைக் காசுச் செலவினங்களைக் கழித்ததன் பின்னரான சரியான சில்லறைக் காசு மீதி ரூ. 15,000/- பரீட்சை மீதியில் குறிப்பிடப்படவில்லை.

(8) சில்லறைக் காசுச் செலவினங்கள் தனித்தனியாக வகைப்படுத்தப்படவில்லை என்பதுடன் அது அத்தகைய செலவினங்களின் மொத்தமாக பரீட்சை மீதியில் காட்டப்பட்டிருந்தன.

(9) 8% வருடாந்த வட்டி வீதத்தில் 2025 அக்டோபர் 01 இல் ஆரம்பிக்கப்பட்ட நிலையான வைப்பு தொடர்பில் 03 மாதங்களுக்கான வட்டி வருமானம் சரியாகக் கணிப்பிடப்படவில்லை.

(10) மின்சார மற்றும் நீர்க் கட்டணங்கள், கணக்கீட்டுக் காலப்பகுதிக்கான அட்டுறு செலவுகளுடன் சரியாகக் கணிப்பிடப்படவில்லை.

(11) கணக்கீட்டுக் காலப்பகுதிக்கான அட்டுறு செலவுகளுடன் வாடகைக் கட்டணங்கள் சரியாகக் கணிப்பிடப்படவில்லை.

## வினா இல. 04

இங்கு பரீட்சகர் நாட்குறிப்பேட்டுப் பதிவுகள் பற்றியும் தொங்கற் கணக்கைத் தயாரிப்பது பற்றியும் பரீட்சார்த்திகள் கொண்டுள்ள அறிவைப் பரீட்சித்திருந்தார். அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளிக்க முயற்சித்திருந்தனர். அவர்களது விடைகளில் பின்வரும் பலவீனங்கள் அடையாளங் காணப்பட்டன.

இவ்வினா **A, B** ஆகிய இரு பகுதிகளில் முறையே பொது நாட்குறிப்பேடு மற்றும் தொங்கற் கணக்கு ஆகியன தொடர்பில் வினவியிருந்தது.

**(a)**

(1) முதலாவது குறிப்பைப் பொறுத்தவரை, அதிகளவான பரீட்சார்த்திகள் தேய்மானத்தை சரியாகக் கணிப்பிடவில்லை என்பதுடன் பதிவு செய்யவும் இல்லை. ஏனெனில், ஒரு காலப்பகுதிக்கான தேய்மானத்தைக் கணிப்பிடுவது பற்றிய அறிவு அவர்களிடம் போதியளவில் இருக்கவில்லை.

(2) அதிகளவான பரீட்சார்த்திகள் போதிய அறிவின்மையால், எடுப்பனவு தொடர்பான பரிவர்த்தனைக்கு விடையளிக்கத் தவறியிருந்தனர்.

(3) வரவு மற்றும் செலவு ஊடுசெயல்களுக்கு தெளிவான முன்வைப்பு காணப்படவில்லை.

(4) அதிகளவான மாணவர்கள் ஒவ்வொரு நாட்குறிப்பேட்டுப் பதிவுளுக்கும் காசேட்டைப் பயன்படுத்தியிருந்தனர்.

(5) அதிகளவான பரீட்சார்த்திகள் அட்டுறு கணக்கீடு பற்றிய போதிய அறிவைக் கொண்டிருக்காததால், அட்டுறுச் செலவினச் சீராக்கத்திற்கு விடையளிக்கத் தவறியிருந்தனர்.

**(b)**

(1) தொங்கற் கணக்கின் ஆரம்ப மீதி சரியாகக் குறிப்பிடப்படவில்லை.

(2) அதிகளவான பரீட்சார்த்திகள் பரிவர்த்தனைகளை மாற்றுவதற்கு வரவு மற்றும் செலவுப் பக்கங்களைச் சரியாகக் குறிப்பிடவில்லை.

## வினா இல. 05

இவ்வினா **(A)**, **(B)** என்ற இரண்டு உப பகுதிகளைக் கொண்டிருந்தது.

பரீட்சகர் கணக்கீட்டுச் சமன்பாடுகள் மற்றும் வங்கிக் கணக்கிணக்கங்கள் பற்றிய அறிவையும் புரிதலையும் பரீட்சித்திருந்தார். அதிகளவான பரீட்சார்த்திகள் வினாவுக்கு விடையளிக்க முயற்சித்திருந்ததுடன், அவர்களிடமிருந்து பின்வரும் பலவீனங்களையும் அடையாளங் காண முடிந்தது.

இவ்வினா கணக்கீட்டுச் சமன்பாடுகள் மற்றும் வங்கிக் கணக்கிணக்கங்களுக்காக முறையே **(A), (B)** என்ற இரு பகுதிகளை உள்ளடக்கியிருந்தது.

**பகுதி A**

அதிகமான பரீட்சார்த்திகள் வினாவின் இப்பகுதிக்கு விடையளிக்க முயற்சித்திருந்ததுடன் சரியான விடையையும் அளித்திருந்தனர். எவ்வாறாயினும், சில பரீட்சார்த்திகள் பொதுச் சமன்பாடு பற்றிய அறிவைக் கொண்டிருக்கவில்லை. அதாவது ஏன் நாங்கள் சமன்பாடு தயாரிக்கின்றோம் என்பது பற்றிய அறிவு அவர்களிடம் காணப்படவில்லை. அத்துடன் வினாவில் பரீட்சகர் விடையளிப்பதற்கான சமன்பாட்டை வழங்கியிருந்த போதிலும் சில பரீட்சார்த்திகள் அவர்களது விடைகளைச் சமர்ப்பிக்க தமது சொந்தச் சமன்பாடுகளைப் பயன்படுத்தியிருந்தனர். அதன் விளைவாக அவற்றுக்குரிய புள்ளிகளை அவர்கள் இழந்திருந்தனர்.

சில பரீட்சார்த்திகள் நாட்குறிப்பேட்டுப் பதிவுகள் மற்றும் பேரேட்டுக் கணக்குகள் ஊடாக விடையளிக்க முயற்சித்திருந்ததையும் அவதானிக்க முடிந்தது. ஆனால் இந்த வினாவின் கீழ் அவை பரீட்சிக்கப்படவில்லை. அதற்கிணங்க, அவர்கள் வினாவுக்குச் சரியாக விடையளிக்கத் தவறியதால் அவர்களின் கணக்கீட்டு அறிகைப் பொருட்படுத்தாது புள்ளிகளை இழந்திருக்கிறார்கள்.

**பகுதி B**

**பகுதி B** இல், பரீட்சகர் வங்கிக் கணக்கிணக்கம் பற்றிய அறிவைப் பரீட்சித்திருந்தார். அதிகமான பரீட்சார்த்திகள் இப்பகுதிக்கு விடையளிக்க முயற்சித்திருந்ததுடன் சரியான விடைகளையும் வழங்கியிருந்தனர். எவ்வாறாயினும், சில பரீட்சார்த்திகள் சீராக்கப்பட்ட காசேடு மற்றும் வங்கிக் கணக்கிணக்கங்களின் மூலகங்கள் ஆகியன பற்றிய அறிவைக் கொண்டிருக்காமை அவதானிக்கப்பட்டது.

## <u>பகுதி C</u>

## வினா இல. 06

இவ்வினா தனியுடமை வியாபாரம் ஒன்றின் நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதைப் பரீட்சித்திருந்ததுடன் **(a), (b)** என இரண்டு பகுதிகளையும் கொண்டிருந்தது. பகுதி **(a)** ஆனது முற்றடக்க வருமானக் கூற்றைத் தயாரிப்பதைப் பரீட்சித்திருந்ததுடன் பகுதி **(b)** ஆனது நிதி நிலைக் கூற்றைத் தயாரிப்பதைப் பரீட்சித்திருந்தது. ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் காணப்பட்டது. பொதுவாக அவதானிக்கப்பட்ட வழுக்களும் விடுபாடுகளும் கீழ்வருமாறு:

**(a) முற்றடக்க வருமானக் கூற்று:**

(1) சில பரீட்சார்த்திகள் தவறான இறுதி இருப்புப் பதிவு காரணமாக மொத்த இலாபத்தைத் தவறாகக் கணிப்பிட்டிருந்தனர்.

(2) சில மாணவர்கள் விற்பனைத் தரகுச் சீராக்கத்தைத் தவிர்த்து, பரீட்சை மீதிப் பெறுமானங்களை மாத்திரம் பயன்படுத்தியிருந்தனர். அதே வேளை அதனைச் சரியாகக் கணிப்பிட்டிருந்த சில பரீட்சார்த்திகள் அதனைத் தவறாக வருமானமொன்றாகப் பதிவு செய்திருந்தனர்.

(3) சில பரீட்சார்த்திகள் ஆண்டிற்கான தேய்மானத்தைத் துல்லியமாகக் கணிப்பிடவில்லை.

(4) களஞ்சிய வாடகையின் முன்செலுத்திய பகுதி கவனத்திற் கொள்ளப்படவில்லை; செலுத்திய மொத்தத் தொகை இலாப, நட்டக் கணக்கில் பதிவிடப்பட்டது.

(5) மூன்று மாத காலப்பகுதிக்குப் பொருத்தமான வங்கிக் கடன் வட்டி கணிப்பிடப்படவில்லை.

(6) சில பரீட்சார்த்திகள் வியாபாரக் கடன்பட்டோருக்கான ஏற்பாடுகளை சரியாகக் கணிப்பிடவில்லை என்பதுடன் ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள் அதே போன்று அறவிட முடியாக் கடன்களையும் கணக்கிடத் தவறியிருந்தனர்.

**(b) நிதி நிலைக் கூற்று:**

(1) சில பரீட்சார்த்திகள் நடைமுறையல்லாச் சொத்துக்களில் கட்டட மீதியிலிருந்து தனியாகக் காணியை முன்வைத்திருக்கவில்லை.

(2) சில பரீட்சார்த்திகள் ஆண்டிற்கான தேய்மானத்தை கணக்கிற்கொள்ளாது, இறுதிப் பெறுமானமாக பரீட்சை மீதியிலிருந்த திரண்ட தேய்மானத்தைப் பயன்படுத்தியிருந்தனர்.

(3) பரீட்சார்த்திகள் அறவிடமுடியாக் கடன் பதிவழிப்பு மற்றும் ஐயக்கடன்களுக்கான விடுதொகை ஆகியவற்றைக் கழிக்காததால், வியாபார வருமதிகள் தவறாகக் குறிப்பிடப்பட்டிருந்தன.

(4) சில பரீட்சார்த்திகள் நடைமுறைப் பரிப்புகளின் கீழ், சரியான அட்டுறு கடன் வட்டியை அறிக்கையிடவில்லை.

- - -

**<u>பரீட்சார்த்திகளின் செயலாற்றுகை மட்டத்தை மேம்படுத்த கவனத்திற் கொள்ள வேண்டிய பொதுவான விடயங்கள்</u> :**

**(1)** புதிய பாடத்திட்டத்தை முழுமையாகவும் ஆழமாகவும் படிப்பதுடன் புதிய பாட விடயங்களில் அதிக கவனத்தைச் செலுத்தவும்.

**(2)** வினாவைப் பல முறை வாசித்து வினாவில் கேட்கப்பட்டதற்கு மாத்திரம் விடை அளிக்கவும். தேவையற்ற விடயங்களை எழுத வேண்டாம்.

**(3)** இப்பாடத்துடன் தொடர்புடைய சுய கற்றல் புத்தகங்கள், முன்னோடி வினாத்தாள்கள், செய்தி மடல்கள், சஞ்சிகைகள் போன்றவற்றை வாசிக்கவும்.

**(4)** அடிப்படைக் கோட்பாட்டு எண்ணக்கருக்களை சரியாக இனங்காண்பதுடன், வினாக்களுக்கு விடையளிப்பதற்குத் தேவையான திறன்களையும் வளர்த்துக் கொள்ளவும்.

**(5)** கையெழுத்து தெளிவாக இருக்க வேண்டும் என்பதுடன் வினா இலக்கங்களும் சரியாக எழுதப்பட வேண்டும்.

**(6)** வினாத்தாளில் தரப்பட்ட அறிவுறுத்தல்களைப் பின்பற்றுவதுடன் கணிப்பீடுகளையும் செய்முறைகளையும் சரியாகக் காட்டவும்.

**(7)** அதிகமான கடந்தகால வினாத்தாள்களைச் செய்துபார்த்து, அறிவை மேம்படுத்தவும்.

**(8)** நேரத்தை வினைத்திறனான வகையில் செலவழிக்கவும்.

**(9)** விடைத்தாளைக் கையளிப்பதற்கு முன்னர், வினா இலக்கங்கள் போன்றவை சரியாக எழுதப்பட்டுள்ளதா என்பதைச் சரிபார்க்கவும்.

**(10)** சிறந்த தயார்நிலையுடனும் பரீட்சையில் சித்தியடையும் அதியுயர் நம்பிக்கையுடனும் பரீட்சைக்கு முகங்கொடுக்கவும்.

- * * * -